# ஆகஸ்ட் 7 - புனித கஜெதான் (Gajetan) (1480-1547)




இவருடைய தாய் மிகுந்த பக்தி உள்ளவள். இவர் புண்ணிய வாழ்வு நடத்த தாய் உதவி செய்தாள். இவர் இளமையில் இருந்தே பாவிகளுக்காக செபித்து ஒறுத்தல் செய்வார். "ஆன்மாக்களை சேகரிப்பவர்" போன்ற பட்டப்பெயரைப் பெற்றார். இவர் குருப்பட்டம் பெற்று மறைந்த வாழ்வு நடத்தலாம் என்ற நம்பிக்கையுடன் உரோமைக்குச் சென்றார். என்றாலும் பாப்பானவர் வற்புறுத்தியபடியால் ஒரு பெரிய பதவியை ஏற்றுக்கொண்டார். பாப்பு இறந்ததும் தம் சொந்த ஊருக்குத் திரும்பி கடவுளின் மகிமைக்காகவும், பாவிகளின் ஈடேற்றுத்துக்காகவும் உழைத்தார். பின்னர் வெனிஸ் நகருக்கு சென்று ஒரு மருத்துவமனையில் சேவை செய்தார். பின் உரோமைக்குச் சென்று ஒரு துறவற சபையை நிறுவினார். இவர்கள் லூத்தர் எழுப்பிய குழப்பத்தால் பரவிய தப்பறைகளை அழிக்க முயன்றார். குருக்கள், விசுவாசிகள் ஆகியோரது ஒழுக்கத்தை சீர்படுத்தி நோயாளிகளை விசேட அன்புடன் பராமரித்தார். தேவ ஆராதனைச் சடங்குகளை மிகுந்த ஆர்வத்துடன் நிறைவேற்றினார். புனித கஜெதானுக்கு தேவதாய் மீது மிகுந்த பக்தி உண்டு. நாற்பது மணி ஆராதனை என்னும் பக்தி முயற்சியையும் இவர் பரப்பினார்.

இவர் காலத்தில் வாழ்ந்த மக்கள் செல்வத்தையும் பெயர் கீர்த்தியையும், இன்ப சுகங்களையுமே தேடி வந்தனர். இவர்களுக்கு நற்புத்தி புகட்டும்படி இவர் உலகப்பற்றுகளை அகற்றி அப்போஸ்தலர்களைப் போல தவவாழ்வ நடத்தினார். தம் சபையினர் சொத்து சுகங்களைத் தேடக் கூடாது. தர்மம் கேட்கக் கூடாது, தேவ பராமரிக்கையின் மேல் நம்பிக்கை வைக்கவேண்டுமென்பார். இவருக்கு ஏராளமான வேலைகள் இருந்த போதிலும் பல மணி நேரத்தை செபத்தில் செலவழித்தார்.

**சிந்தனை:** நாமும் புனித கஜெதானைப் போல் ஆத்துமங்களை விரட்டிப் பிடித்து கடவுளிடம் கொண்டு வரலாம். இதற்காக ஒவ்வொரு நாளும் செப தவம் செய்வோம்.

**செபம்:** ஆண்டவரே, எங்களுக்கு ஆன்மாக்களைத் தாரும்ளூ மற்ற அனைத்தையும் எடுத்துக் கொள்ளும். (புனித தொன்போஸ்கோ)